தினமணி

**தருமபுரியில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 21 May 2010 12:36:38 PM IST

தருமபுரி, மே 20: தருமபுரி ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை (மே 21) காலை 11.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் குறைகளை கூறி உரிய நிவாரணம் பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் பெ. அமுதா வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**மா உற்பத்தி கருத்தரங்கு**

First Published : 21 May 2010 12:36:16 PM IST

போச்சம்பள்ளி, மே 19: போச்சம்பள்ளியில் மா உற்பத்தியாளர், பதப்படுத்துவோர், விற்பனையாளர் மற்றும் ஏற்றுமதியாளர் கருத்தரங்கு அண்மையில் நடந்தது.

தமிழ்நாடு மா உற்பத்தியாளர் சம்மேளன தலைவர் சிற்றரசு தலைமை தாங்கினார். கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக தேசிய வேளாண் முன்னோடி திட்ட அலுவலர் பாலமோகன், பெங்களூர் மதர் டெய்ரி நிஜகுணா ஆகியோர் உரையாற்றினர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட மா உற்பத்தியாளர்கள் பங்கேற்றனர்.

**முன்கூட்டியே தென்மேற்கு பருவ மழை: வானிலை ஆய்வு மையம் தகவல்**

First Published : 22 May 2010 02:17:11 AM IST

Last Updated : 22 May 2010 06:32:50 AM IST

சென்னை, மே 21: தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு முன் கூட்டியே தொடங்க வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபர் தீவுப் பகுதிகளில் வழக்கமாக மே 20-ம் தேதி தென் மேற்கு பருவ மழை உருவாகும். ஆனால் இந்த ஆண்டு 4 நாள்களுக்கு முன் கூட்டியே உருவானது. இதனாலேயே லைலா புயல் உருவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதே போல் வழக்கமாக கேரளத்தில் ஜூன் முதல் வாரத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கும். ஆனால் இந்த ஆண்டு ஒரு வாரத்துக்கு முன்னதாக கேரளத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்க வாய்ப்பு உள்ளது. இதனால் தமிழகத்தின் கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களிலும் முன்கூட்டியே மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினத்துக்கு வடக்கே 50 கிலோ மீட்டர் தூரத்தில் மையம் கொண்டிருந்த லைலா புயல் வலுவிழந்து வடக்கு மற்றும் வடகிழக்கு திசையில் நகர்ந்து சென்றதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதனால் ஆந்திரத்தில் தெலங்கானா கடற்கரை பகுதிகளில் பல இடங்களில் நல்ல மழை பெய்துள்ளது. கேரளம், ராயலசீமா, தமிழ்நாடு, கர்நாடகம் உள்ளிட்ட பகுதிகளிலும் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது.
தமிழகத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை பெய்துள்ள மழை நிலவரம் (மில்லி மீட்டரில்):
ஆலங்காயம் 110, முத்துப்பேட்டை 90, பர்கூர் 60, செங்கம் 50, வாணியம்பாடி, போச்சம்பள்ளியில் தலா 50, திருவண்ணாமலை, ஆரூர், சூலகிரி, வாழப்பாடி ஆகிய பகுதிகளில் தலா 40 மில்லி மீட்டர், ஆத்தூர் 30, விழுப்புரம் திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், ஆரணி, ஊத்தங்கரை தலா 20, குளித்துறை, தர்மபுரி, ஓசூர், தளி 10.

**உருளைக்கிழங்கு மூட்டை எடை குறைப்பு ரத்து செய்யக் கோரி ஆட்சியர் அலுவலகம் முற்றுகை**
First Published : 21 May 2010 10:44:26 AM IST

உதகை,மே 20: நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கை
விற்பனைக்கு கொண்டுசெல்லும்போது மூட்டைகளின் எடையை குறைக்கச் சொல்லும் முறையை ரத்து செய்ய வலியுறுத்தி நீலகிரி உருளைகிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் வியாழக்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.(படம்)

முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாய சங்கத்தினரிடம் ஆட்சியர்(பொ) குப்புசாமி பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது விவசாயிகள் சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில் கூறியிருந்தது:

நீலகிரி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக விவசாயம் செய்துவரும் நாங்கள் உருளைக்கிழங்கு, முட்டைகோஸ் உள்ளிட்ட மலை காய்கறிகளை மேட்டுப்பாளையத்தில் இருக்கும் அரசு கூட்டுறவு சங்கத்தின் என்சிஎம்எஸ் மற்றும் தனியார் மண்டிகளில் விற்பனை செய்து வருகிறோம்.

இதுவரை எங்கள் விளைப் பொருள்களை 60கிலோ முதல் 90கிலோ வரை எடை கொண்ட மூட்டைகளாக்கி ஏலத்திற்கு கொண்டு சென்றோம். ஆனால், தற்போது 50கிலோவிற்கு மிகாமல் மூட்டைகளாக்கி கொண்டுவரச் சொல்கின்றனர். அவர்கள் குறிப்பிட்டுள்ள சுதேசி பைகளில் 50 கிலோவிற்கு மிகாமல் செல்லும் மூட்டைகளை மட்டும் ஏலத்திற்கு எடுத்துக் கொள்கின்றனர்.

நீலகிரி மாவட்டத்தை பொருத்த மட்டில் மூட்டைகளின் எண்ணிக்கை அடிப்படையில்தான் லாரி வாடகை கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது எடை குறைந்த மூட்டைகள் காரணமாக அதிகளவில் மூட்டைகளாக்கிகொண்டு செல்வதால் லாரி வாடகை அதிகரித்து விவசாயிகளுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது. எனவே தற்போது அமலில் உள்ள எடைகுறைப்பு மூட்டைநடைமுறையை ரத்து செய்து பழைய முறையில் மூட்டைகளை விற்பனைக்கு அனுமதிக்க வேண்டும்.

விவசாயிகளின் கோரிக்கை மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றுஆட்சியர் (பொ) உறுதி அளித்ததால் விவசாயிகள் முற்றுகை போராட்டத்தை கைவிட்டனர்.

**உருளைக்கிழங்கு மூட்டை எடை குறைப்பு ரத்து செய்யக் கோரி ஆட்சியர் அலுவலகம் முற்றுகை**
First Published : 21 May 2010 10:44:26 AM IST

உதகை,மே 20: நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கை
விற்பனைக்கு கொண்டுசெல்லும்போது மூட்டைகளின் எடையை குறைக்கச் சொல்லும் முறையை ரத்து செய்ய வலியுறுத்தி நீலகிரி உருளைகிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் வியாழக்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.(படம்)

முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாய சங்கத்தினரிடம் ஆட்சியர்(பொ) குப்புசாமி பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது விவசாயிகள் சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில் கூறியிருந்தது:

நீலகிரி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக விவசாயம் செய்துவரும் நாங்கள் உருளைக்கிழங்கு, முட்டைகோஸ் உள்ளிட்ட மலை காய்கறிகளை மேட்டுப்பாளையத்தில் இருக்கும் அரசு கூட்டுறவு சங்கத்தின் என்சிஎம்எஸ் மற்றும் தனியார் மண்டி களில் விற்பனை செய்து வருகிறோம்.

இதுவரை எங்கள் விளைப் பொருள்களை 60கிலோ முதல் 90கிலோ வரை எடை கொண்ட மூட்டைகளாக்கி ஏலத்திற்கு கொண்டு சென்றோம். ஆனால், தற்போது 50கிலோவிற்கு மிகாமல் மூட்டைகளாக்கி கொண்டுவரச் சொல்கின்றனர். அவர்கள் குறிப்பிட்டுள்ள சுதேசி பைகளில் 50 கிலோவிற்கு மிகாமல் செல்லும் மூட்டைகளை மட்டும் ஏலத்திற்கு எடுத் துக் கொள்கின்றனர்.

நீலகிரி மாவட்டத்தை பொருத்த மட்டில் மூட்டைகளின் எண்ணிக்கை அடிப்படையில்தான் லாரி வாடகை கொடுக்கப் பட்டு வருகிறது. தற்போது எடை குறைந்த மூட்டைகள் காரணமாக அதிகளவில் மூட்டைகளாக்கிகொண்டு செல்வதால் லாரி வாடகை அதிகரித்து விவசாயிகளுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது. எனவே தற்போது அமலில் உள்ள எடைகு றைப்பு மூட்டைநடைமுறையை ரத்து செய்து பழைய முறையில் மூட்டைகளை விற்பனைக்கு அனுமதிக்க வேண்டும்.

விவசாயிகளின் கோரிக்கை மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றுஆட்சியர் (பொ) உறுதி அளித்ததால் விவசாயிகள் முற்றுகை போராட்டத்தை கைவிட்டனர்.

**விவசாய தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

First Published : 21 May 2010 12:49:05 PM IST

ஆரணி, மே 20: சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தினர் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

100 நாள் வேலை திட்டத்தில் மண்ணின் தன்மைக்கு ஏற்ப பணியின் அளவைக் குறைத்து கூலியை ரூ.150 என உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

சங்கத்தின் ஒன்றியத் தலைவர் சேகர் தலைமை தாங்கினார். ஒன்றியச் செயலர் தங்கமணி, பொருளாளர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

செங்கம்

செங்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் புதன்கிழமை அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

சங்கத்தின் ஒன்றியத் தலைவர் குமார் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் நடராஜன், மாவட்டச் செயலர் சிவக்கு மார், ஒன்றியச் செயலர் குமரேசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**உரிமமின்றி பூச்சி மருந்து விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை: வேளாண் உதவி இயக்குனர்**

பண்ருட்டி: உரிமம் இல்லாமல் பூச்சி மருந்து விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பண்ருட்டி வேளாண்மை உதவி இயக் குனர் எச்சரித்துள்ளார். பண்ருட்டி வேளாண்மை உதவி இயக்குனர் ஹரிதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பூச்சிக்கொல்லி விற்பனையாளர்கள் பூச்சி மருந்து விற்பனைக்கான உரிமத்தை இரு

ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப் பிக்க வேண்டும். புதுப் பிப்பதற்கு உரிமம் முடியும் முன் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். விற்பனையா ளர்கள் உரிமம் பெற்ற பின்னரே இருப்பு வைத்து விற்பனை செய்திட வேண்டும்.

காலக்கெடு முடிவதற்கு முன் உரிமத்தை புதுப்பித் துக்கொள்ள வேண்டும். இருப்பு பதிவேடு, கொள் முதல், ரசீது, விற்பனை ரசீது, ஆகியவற்றை உரிய படிவத்தில் பராமரிக்க வேண்டும். தமிழக அரசின் அங்கீகாரம் இல்லாத, தடை செய்யப்பட்ட மருந்துகளை விற்பனை செய்யக் கூடாது. விற் பனை செய்யும் மருந்துகளுக்கு உரிய ரசீது படிவத்தில் வழங்க வேண்டும். சட்டத்திற்கு புறம்பான எவ்வித செயலும் தண்டனையாக, அபராதமோ அல்லது சிறை தண்டனையோ விதித்திட பூச்சிமருந்து சட்டம் 1968 இடமளிக்கிறது. எனவே தனியார் பூச்சிமருந்து விற்பனையாளர்கள் மற்றும் கூட்டுறவு பூச்சி மருந்து விற்பனையாளர்கள் பூச்சி மருந்து சட்ட விதிகளை கடைபிடித்திட வேண் டும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் உதவி வேளாண்மை இயக்குனர் ஹரிதாஸ் கூறியுள்ளார்.

**இயற்கை விவசாய விழிப்புணர்வு பிரசாரம்: ஆதிரெங்கத்தில் இன்று துவக்கம்: நம்மாழ்வார்**

திருத்துறைப்பூண்டி: ""இயற்கை விவசாயம் கடன் படாத உழவான்மை, நஞ்சில்லா உணவு உற்பத்தி, நோயற்ற வாழ்வு என்ற குறிக்கோளை முன்வைத்து செல்கிறது. அதற்கான இயற்கை விவசாய விழிப்புணர்வு பிரசாரம் இன்று (22ம் தேதி) துவங்குகிறது,'' என இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தது என சங்க இலக்கியம் கூறுகிறது. யானை உயரம் பயிர் வளர்ந்தது. கதிர் தள்ளியது, எனக்கூறுகிறது பாட்டு. ஆற்று மணலில் கல்லணை எழுப்பியவனுக்கு தொப்பியை கழட்டி அன்னியன் வணக்கம் செலுத்தினால் என வரலாறு கூறுகிறது. ஆயிரம் ஆண்டுக்கு முன் இலங்கையில் பஞ்சம் வந்தபோது, சோழமன்னன் கப்பலில் நெல் அனுப்பிய கதையை கல்வெட்டு பேசுகிறது.

இவற்றை எல்லாம் கூறவே இந்த விழிப்புணர்வு பிரச்சாரம். கவிஞர் வைரமுத்து கூறுவதுபோல, "பட்டு வேட்டிக்கு தவமிருந்தோம். கட்டிய கோவணம் கழவாடப்பட்டுவிட்டது,' என்பது போல, நெற்களஞ்சியத்தில் உழுது, விதைத்து அறுத்தவர்கள் பட்டினி கிடக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம், வேதிப்பொருட்கள், கம்பெனி விதைகளால் மணல் மலடாகிப்போனது. கடனும், வட்டியும் தள்ளுபடி செய்ய வேண்டி உள்ளது. மனிதர்கள் மீளமுடியாத நோய்க்கு ஆளாகிப்போனோம். குடிநீர் பாட்டிலில் புகுந்தது. விதைகள் களவு போயின. மாடுகள் கலப்படம் ஆகின. நமது மூதாதையர் ஞானம் களவு போனது. தேசத்து மானம் அடகு போனது என்பதை உணர்கிறோம்.

புலித்தோல் போற்றிய பசு பயிர்களை மேய்ந்ததுபோல, விஞ்ஞானம் என்ற போர்வையை போர்த்தி வியாபாரம் நம் உழைப்பை மேய்ந்துவிட்டது. இதை இன்று பலரும் உணர்ந்து வருகிறோம். இதற்கு மாற்று என்ன? உழவர்கள் இயற்கைக்கு திரும்புகிறார்கள். களையாக காணப்படும் காட்டாமணக்கே, உரமும் ஆகும். பூச்சிக்கொல்லியுமாகும் என்பதை உணர்ந்துவிட்டோம். கோடையில் கொளிஞ்சி விதைத்தால் காடு வளமாகும் என்பது உண்மையாகிவிட்டது. கழிவுகளை எருவாக்கினால் கடன் வாங்கத்தேவையில்லை. அமுத கரைசல், ஆட்டூட்டம், மாட்டூட்டம் தயாரித்தால் பட்டணம் தேடி அலையத்தேவையில்லை. இவற்றை உணர்த்தத்தான் விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்துகிறோம். விஞ்ஞான சாகுபடியில் 24 மூடை அறுக்கிறார்கள்.

ஒற்றை நாற்று நட்டவர்கள் 60 மூடை அறுக்கிறார்கள். இரண்டரை மடங்கு அதிகம். முருகுமங்கலம், காரைக்கால், மதுராந்தகம், ஈரோடு, சத்தி, ஒரத்தநாடு, ஆலங்குடி, ஆதிரெங்கம், இலுப்பக்கோரை, கொருக்கை, நன்னிலம், புதுக்கோட்டை என பல கிராமங்களில் சாதனை விரிவடைகிறது. ஏக்கருக்கு ஒன்றரை கிலோ விதை போதும். ரசாயன

உரம் தேவையில்லை. பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி தவையில்லை. நிலம் மறைய நீர் விட்டால் போதும். தாள் கணக்குக்கு நீர் விட்டால் போதும் என்ற உண்மைகள் தெம்பூட்டுகிறது. இதை அனைத்து உழவர்களுக்கும் எடுத்துக்கூறத்தான் பிரச்சாரம் துவங்குகிறோம். உழவர்கள் விழிப்படையும்போது, சில கம்பெனிகளும், அவர்களது தரகர்களும் மரபணு மாற்று விதைகள் என்ற மாற்றுடை அணிந்து வருகிறார்கள். அவர்களிடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டி உள்ளது.

தர்மபுரி, சேலம் உழவர்களுக்கு சில பன்னாட்டு கம்பெனிகள் அநியாய விலைக்கு சொத்தை விதைகளை கொடுத்து பருத்தி வெடிக்காததால் உழவர்கள் பாதிப்புக்கு உள்ளாகினார்கள். சொத்தை மக்காச்சோள விதைகளை உழவர் தோளில் கட்டியது பன்னாட்டு கம்பெனி. திண்டுக்கல், ஈரோடு, கோவை உழவர்கள் நொந்து போனார்கள்.

இதுபற்றி, எச்சரிக்கவும், திண்டுக்கல் காந்தி கிராமிய பல்கலை முன்னாள் துணை வேந்தர் மார்க்கண்டன் தலைமையில் இந்திய இயற்கை உழவர் இயக்க மாநில தலைவர் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் விவசாயிகளுடன் இணைந்து விழிப்புணர்வு பிரச்சாரத்தை துவக்குகிறார். ஆதிரெங்கம் இயற்கை வேளாண் ஆராய்ச்சி மையத்தில் இருந்து இன்று (22ம் தேதி) துவங்குகிறார். இவர்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**மஞ்சள் சாகுபடி உயர்வால் சேனை டன் ரூ. 21 ஆயிரம்**

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் விவசாயிகள் அதிகளவில் மஞ்சள் பயிரிட்டதால், சேனைக் கிழங்கு உற்பத்தி வெகுவாக குறைந்து, தற்போது ஒரு டன் சேனைக்கிழங்கு விலை 21 ஆயிரம் ரூபாயை நெருங்கியுள்ளது.

விவசாய நிலங்களை அதிகம் கொண்ட கோபி பகுதியில் நெல், கரும்பு, வாழை, மஞ்சளுக்கு அடுத்தபடியாக சேனைக் கிழங்கை விவசாயிகள் ஊடுபயிராக பயிரிட்டு வந்தனர். ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதி கொண்ட கோபி பகுதியில் விளையும் சேனை கிழங்கு அரபு நாடுகள், கேரளா மற்றும் கர்நாடகா மாநிலத்துக்கு அனுப்பப்படுகிறது. மஞ்சள் விலை படிப்படியாக உயர்ந்து குவிண்டால் 16 ஆயிரம் ரூபாயை தொட்டது. இதனால், கோபி பகுதியில் இரண்டாம் போகத்தில் விவசாயிகள் மஞ்சளை அதிகளவு பயிரிட்டனர். சேனைக் கிழங்கு சாகுபடி பரப்பு குறைந்தது. கோபி, சிறுவலூர், கடத்தூர், கள்ளிப்பட்டி, வாணிப்புத்தூர், நம்பியூர் உள்ளிட்ட பகுதியில் சேனை கிழங்கு குறைவான அளவில்தான் பயிரிடப்பட்டது. கோபி பகுதியில் தற்போது அறுவடை முடிந்த நிலையில், அரபு நாடுகளில் சேனை கிழங்குக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால், கடந்தாண்டு ஒரு டன் சேனை கிழங்கு 10 ஆயிரம் ரூபாய் முதல் 16 ஆயிரம் வரை விற்றது. தற்போது ஏற்பட்டுள்ள பற்றாக்குறையால் 21 ஆயிரம் ரூபாயை நெருங்கியுள்ளது. 10 மாத பயிரான சேனை கிழங்கு பயிரிட ஒரு ஏக்கருக்கு மூன்று டன் சேனை கிழங்கு விதை தேவைப்படும். தற்போது ஏற்பட்டுள்ள விலை உயர்வால் விவசாயிகள் விதைக்காக சேமித்து வைக்காமல், சேனை கிழங்கை விற்று வருகின்றனர்.

**நெல் சாகுபடி பணி தீவிரம் : வயலில் முளைத்த கடைகள்**

கோபிசெட்டிபாளையம்: கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளில் முதல்போக சாகுபடிக்கான பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. வெளி மாவட்டத்தை சேர்ந்த விவசாய கூலித் தொழிலாளர்கள் வசதிக்காக வயல்வெளியில் தற்காலிக கடைகள் தோன்றியுள்ளன.

பவானிசாகர் அணையில் இருந்து கடந்த மாதம் 15ம் தேதி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. நடப்பாண்டு நெல், கரும்பு மற்றும் மஞ்சளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால், அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் உள்ள 24 ஏக்கரில் அதிகளவில் நெல், கரும்பு மற்றும்

மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. குறைந்த விதை நெல் மற்றும் குறைந்த தண்ணீர் தேவைப்படும் செம்மைநெல் சாகுபடி முறையை விவசாயிகள் அதிகளவில் பின்பற்றி வருகின்றனர். தற்போது நெல் நாற்று நடும் பணி துவங்கியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விவசாய கூலியாட்களுக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், நெல் நாற்று விடுவது, நடுவது, கரும்பு கரணை நடுதல் மற்றும் வெட்டுதல் போன்ற பணிகளுக்கு வெளி மாவட்டத்தில் இருந்து விவசாய கூலி தொழிலாளர்கள் கோபியில் முகாமிட்டு வருகின்றனர். குறிப்பாக சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், நாமக்கல் மாவட்டங்களில் இருந்து அதிகளவில் விவசாயத் தொழிலாளர்கள் கோபியில் குவிந்த வண்ணம் உள்ளனர்.

வெளி மாவட்டத்தில் இருந்து வந்துள்ள விவசாயத் தொழிலாளர்கள் வயல்வெளியில் கொட்டகை அமைத்து தங்கி, விவசாயப் பணிகளை கவனித்து வருகின்றனர். காலை 6 மணிக்கு பணிகளை துவங்கும் இவர்கள் வசதிக்காக, தற்காலிக டீக்கடைகள் வயல்வெளிக்கு அருகிலேயே தோன்றியுள்ளன. வழக்கமாக கோபி கிராமப்பகுதிகளில் மாலை 5 மணிக்கு மேல் பொதுமக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும். முதல்போக சாகுபடி பணியால் இரவு 7 மணி வரை கூட கிராமப்பகுதிகளில் உள்ள தற்காலிக டீக்கடைகளில் கன ஜோராக விற்பனை நடக்கிறது.

**பசுந்தீவனம் உற்பத்தி மாடு விற்பனை உயர்வு**

ஈரோடு: மழை பொழிவால் பசுந்தீவனம் உற்பத்தியாகி சந்தையில் மாடு விற்பனையும் அதிகரித்தது.ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று கூடுகிறது. தமிழகம் முழுவதும் வறட்சி காரணமாக கால்நடைகளுக்கு பச்சை தீவனம் தட்டுப்பாடு ஏற்பட்டது. 15 நாட்களாக தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் ஆங்காங்கே லேசாக மழை பொழிந்தது.இதனால், தரிசு நிலங்களில் கூட மேய்ச்சலுக்கு உதவும் வகையில் பச்சை தீவனங்கள் கிடைத்தன.கேரளா, கர்நாடகா மாநிலத்தில் ஓரளவுக்கு விவசாய நிலங்கள் பசுமையாக உள்ளன. ஆகையால் அம்மாநில விவசாயிகள் மாடுகளை அதிகளவில் வாங்கிச் சென்றனர். 400 சிந்து மாடுகள், 250 எருமை மாடுகள் விற்பனைக்காக வந்திருந்தன.சிந்து மாடுகள் 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 29 ஆயிரம் ரூபாய் வரையிலும், எருமை மாடுகள் 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலைபோனது.இவ்வாறு அவர் கூறினார்.

**வரத்து உயர்ந்தும் அரிசி விற்பனை மந்தம்**

ஈரோடு:ஈரோடு மார்க்கெட்டில் அரிசி வரத்து நன்றாக இருந்தாலும் விற்பனை மந்தமாகவே காணப்பட்டது.ஈரோட்டில் சென்றாண்டு இரண்டாம் போகத்தில் ஏ.டி.டி-43, ஏ.டி.டி-36, ஏ.எஸ்.டி.16(இட்லி அரிசி) ஆகிய ரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டன. நெல்லை அரிசியாக மாற்றி ஈரோடு மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள சந்தைகளுக்கும், ஆலைகளுக்கும் விவசாயிகள் விற்கின்றனர்.ஈரோடு வீரப்பன்சத்திரம் அரிசி சந்தை வியாபாரி ஒருவர் கூறியதாவது:கோடைகாலத்தில் பெரும்பாலானோர் ராகி, கம்பு, சோளம் ஆகியவற்றை உணவாக எடுத்துக்கொள்வர். சிறு அரிசி வியாபாரிகள் 75 கிலோ மூட்டைகளை வாங்கி இருப்பு வைப்பர். தற்சமயம் இருப்பு வைக்கும் வியாபாரிகள் குறைந்து வருகின்றனர். வரத்து நன்றாக இருந்தாலும் அரிசி வாங்க ஆள் இல்லாமல் உள்ளது. பள்ளி திறந்தவுடன் ஓரளவுக்கு அரிசி விற்பனை சூடுபிடிக்கும்.நேற்றைய நிலவரப்படி அரிசியின் விலை நிலவரம்(75 கிலோவில்) வருமாறு: அதிசயப் பொன்னி(பழையது) 1,900 முதல் 1,950 ரூபாய் வரையும், அதிசயப்பொன்னி(புதியது) 1,550 முதல் 1,600 ரூபாய் வரையும், கர்நாடகா டீலக்ஸ் (பழையது) 2, 650 முதல் 2,700 ரூபாய் வரையும், கர்நாடகா டீலக்ஸ் (புதியது)2,150 முதல் 2,250 ரூபாய் வரையும், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி (பழையது) 2,350 ரூபாய் முதல் 2,400 ரூபாய் வரையும், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி (புதியது)1,850 முதல் 1,900 ரூபாய் வரையும், கோ-43., ரகம்(புதியது)1,250 ரூபாய் முதல் 1,300 ரூபாய் வரையும், இட்லி அரிசி(புதியது)1,350 முதல் 1,450 ரூபாய் வரையும், ஐ.ஆர்.,20 ரகம்(புதியது)1,300 முதல்

1,400 ரூபாய் வரையும், ஏ.டி.டீ-45.,(புதியது)1300 முதல் 1,400 ரூபாய் வரையும், ஏ.டீ.டி.,36(திடம்) 1,600 முதல் 1,700 ரூபாய் வரை விலைபோயின.

**மாவுப்பூச்சி தாக்குதலால் கத்தரிக்காய் விளைச்சல் குறைவு**

கோபிசெட்டிபாளையம்:கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் மாவுப்பூச்சி தாக்குதலால் கத்தரிக்காய் விளைச்சல் குறைந்துள்ளது. எனவே, வரும் திருமண சீஸனில் கத்தரிக்காய் விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தை பொறுத்தவரை ஆண்டு முழுவதும் கத்தரிக்காயை பொதுமக்கள் உணவில் பயன்படுத்தி வருகின்றனர். டிசம்பர் - ஜனவரி மற்றும் மே - ஜூன் மாதங்களில் கத்தரிக்காய் விளைச்சல் அதிகம் இருக்கும். ஈரோடு, கோவை மாவட்டத்தில் முள்ளற்ற ஊதா வரிக்காயை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர்.

விவசாய நிலங்கள் அதிகம் கொண்ட கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஐந்து ஆண்டுகளாக கத்தரிக்காய், வெண்டை உள்ளிட்ட நாள்தோறும் சமையலில் பயன்படுத்தப்படும் தோட்டக்கலை பயிர்களுக்கு விவசாயிகள் முக்கியத்துவம் கொடுத்து பயிரிட்டு வருகின்றனர். விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால் நெல், கரும்பு, மஞ்சள், வாழை போன்ற பயிர் சாகுபடி பெரும்பாலும் குறைந்து வருகிறது. தற்போது மஞ்சளுக்கு ஏற்பட்ட விலை உயர்வால் கோபி பகுதியில் விவசாயிகள் மஞ்சளை அதிகம் பயிரிட்டு வருகின்றனர்.

கத்தரிக்காய்க்கு தற்போது சீஸன் என்பதால் ஏப்ரல் மாதத்தில் கோபி, பொலவகாளிப்பாளையம், செல்லப்பாளையம், தண்ணீர்பந்தல்பாளையம், அத்தாணி, குப்பாண்டம்பாளையம், சுள்ளிகரடு உள்ளிட்ட பகுதிகளில் கத்தரிக்காயை விவசாயிகள் பயிரிட்டனர். ஆனால் பப்பாளி, மல்பெரி மற்றும் மரவள்ளி கிழங்கை தாக்கிய மாவுப்பூச்சி கத்தரிக்காய் செடிகளையும் தாக்கியுள்ளது. இலைப் புள்ளி நோயும் சேர்ந்து கொண்டது.

இதனால், நடப்பு பருவத்தில் கத்தரிக்காய் மஞ்சள் நிறத்துக்கு மாறி வருகிறது. வரும் வைகாசி, ஆனி மாதங்களில் திருமணம் உள்ளிட்ட சுப விசேஷங்கள் அதிகளவில் நடக்கும். அப்போது கத்தரிக்காய் தேவை அதிகரிக்கும். கத்தரிக்காய் செடிகளை பூச்சி தாக்கியுள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

கத்தரி செடிகளில் ஏற்பட்ட இலை புள்ளியை நோயை பூச்சி மருந்துகளால் கட்டுப்படுத்த முடியும். ஆனால், மாவு பூச்சி தாக்குதலை பூச்சி மருந்துகளால் எதிர்பார்த்த அளவில் கட்டுபடுத்த முடியவில்லை. மழை பலமாக பெய்தால் மட்டுமே மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த முடியும். கடந்த மாதம் ஒரு கிலோ கத்தரிக்காய் 30 ரூபாய் வரை விற்றது. திருமணம் உள்ளிட்ட சுப விசேஷங்கள் இல்லாததால் தற்போது 20 ரூபாய் வரை விற்கிறது.

"பூச்சி தாக்குதலால் ஏற்படும் உற்பத்தி குறைவால் வரும் திருமண சீஸன் காலங்களில் கத்தரிக்காய் விலை அதிகரிக்க கூடும்' என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**துவரை செயல்விளக்க திடல் அமைக்க 10 ஆயிரம் கிலோ விதை இருப்பு**

நாமக்கல்: "துவரை செயல்விளக்க திடல் அமைப்பதற்கென 10 ஆயிரம் கிலோ துவரை ஐ.சி.பி.எல்., 85063 ரகம், தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என, வேளாண் இணை இயக்குனர் துரை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில் தற்போது எல்லா வட்டாரங்களிலும் பரவலாக மழைபொழிவு ஏற்பட்டுள்ளது. தற்போது நிலவும் பருவ சூழலில் மேற்கொண்டு நல்ல மழை பெற வாய்ப்புள்ளது. நடப்பு பட்டம் பயிறு வகைகளில் முக்கிய பயிரான துவரை விதைப்பதற்கு மிகவும் ஏற்றதாகும். தமிழக அரசு தற்போது தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துவரை சாகுபடியினை அதிக அளவு கொண்டுவர வேண்டும் என்பதற்காக இப்பயிரில் செயல் விளக்க திடல்கள் அமைப்பதற்கு மான்யம் வழங்க உள்ளது. செயல்விளக்க திடல் அமைப்பதற்கென 10 ஆயிரம் கிலோ துவரை ஐ.சி.பி.எல்., 85063 ரகம் தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்டேர் விதைப்பு செய்ய 20 கிலோ விதையளவு தேவைப்படும். ஒரு ஹெக்டேர் துவரை பயிரில் செயல் விளக்கம் அமைக்கும் விவசாயிகளுக்கு மேற்கொள்ளும் மொத்த இடுபொருள்களுக்கான செலவினத்தில் 5,000 ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது. இந்த துவரை ரகத்தின் வயது 120 நாட்கள் ஆகும். மிக அதிக மகசூல் கொடுக்கக்கூடிய இந்த துவரை சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகள் மிக அதிக லாபம் பெறலாம்.

அறுவடை முடிந்து கிடைக்கும் விதைகளை கூடுதல் விலையில் விற்பனை செய்யவும் விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் அல்லது கூட்டுறவு சங்கம் மூலம் வசதிகள் செய்து தரப்படும். இந்த அரிய வாய்பினை பயன்படுத்தி துவரை பயிர் சாகுபடி செய்யலாம். அவ்வாறு சாகுபடி செய்ய முன்வரும் விவசயிகள் உடனடியாக தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். செயல்விளக்க திடல்கள் குறைந்த அளவிலேயே பெறப்பட்டுள்ளதால், விவசாயிகள் உடனடியாக செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாசிப்பயறு விதைப்பு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

நாமக்கல்: "கோடை மழையை பயன்படுத்தி பாசிப்பயறு விதைப்பு செய்து பயன்பெறலாம்' என, புதுச்சத்திர வட்டார வேளாண் உதவி இயக்குனர் சித்ரா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: கோடை மழையை பயன்படுத்தி, புதுச்சத்திரம் வட்டார விவசாயிகள்பாசிப்பயறு விதைப்பு செய்து பயன்பெறலாம். ஒரு ஏக்கர் நிலத்துக்கு எட்டு கிலோ பாசிப்பயறு விதை போதுமானது. ஒரு ஏக்கர் நிலத்துக்கு தழைச்சத்தாக 10 கிலோ யூரியாவும், மணிச்சத்தாக 20 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், சாம்பல் சத்தாக 17 கிலோ பொட்டாஷ், அடியுரமாக கடைசி உழவின்போது இட வேண்டும். இரண்டு கிலோ பயறுவகை நுண்ணூட்டத்தை விதைப்பதற்கு முன் சீராக தூவ வேண்டும். ஒரு கிலோ விதைக்க கார்பன்டாசம் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் ப்ளூரசன்ஸ் 10 கிராம் கலந்து விதைப்பு செய்யலாம். விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன் ரைசோபியம் பயறு பாஸ்போ பாக்டீரியா 200 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைத்தால், விதைகள் மூலம் பரவும் பூஞ்சான நோய்களை கட்டுப்படுத்தலாம். ஒரு ஏக்கர் நிலத்துக்கு பென்டிமெத்திலின் 800 மில்லி விதைத்த 3வது நாள் 20 கிலோ மணலுடன் கலந்து போதுமான ஈரப்பதம் இருக்கும்போது சீராக தூவ வேண்டும். விதைத்த 25வது நாள் களை எடுக்க வேண்டும். அதனால் பயிர் வளர்ச்சி துரிதப்படுதப்பட்டு விளைச்சல் அதிகரிக்கிறது.அதிக மகசூல் பெற விதைத்த 25 மற்றும் 40வது நாட்களில் 2 சதவீத டி.ஏ.பி., கரைசல், கை தெளிப்பான்

மூலம் மாலை வேளைகளில் தெளிப்பதால் பூ அதிகம் உற்பத்தியாகி மகசூல் அதிகரிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**இயற்கை விவசாயம்: கருத்தரங்கில் கோரிக்கை**

மானாமதுரை: விவசாய தொழிலாளர் கருத்தரங்கு மானாமதுரையில் நடந்தது. மக்கள் அமைப்பு தலைவர் ஆதி தலைமை வகித்தார்.செயலாளர் சவரிமுத்து முன்னிலை வகித்தார். திருப்புவனம் பகுதி தலைவர் அம்மாசி வரவேற்றார். தோட்டக்கலை துறை உதவி மேலாளர் மகேஸ்வரன், பொறியாளர் வனராஜ், விவசாய அலுவலர் கோகிலா சக்தி பங்கேற்றனர்.

விவசாய கருவிகள் இயங்கும் முறை பற்றி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. மக்கள் அமைப்பு நிர்வாகி மலைராஜ் நன்றி கூறினார். தீர்மானம்: ரசாயன உரங்களால் ஏற்படும் மலட்டு தன்மையை தடுக்க, இயற்கை விவசாயத்திற்கான திட்டங்களை செயல்படுத்த வேண்டும். இயற்கை மாற்றங் களால் விவசாயத்தில் ஏற்படும் நஷ்டத்திற்கு இழப்பீடு வழங்கி, விளை நிலங்கள் வீட்டு மனையாக மாறுவதை தடுக்க வேண்டும்.

**பால் கொள்முதல் விலையைஉயர்த்த பா.ஜ., வலியுறுத்தல்**

மதுரை:பால்கொள்முதல் விலையை லிட்டருக்கு ஐந்து ரூபாய் வரை உயர்த்த வேண்டும் என, பா.ஜ., வலியுறுத்தியுள்ளது. மதுரையில் நடந்த பா.ஜ., மாநில செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட மேலும் சில தீர்மானங்கள் வருமாறு:மத்திய அரசு ஆட்சிக்கு வந்தால் 100 நாட்களில் விலைவாசியை குறைப்போம் என வாக்குறுதி அளித்தது. ஆனால், விலைவாசி ஏறி வருகிறது. மத்திய அரசு விலைவாசியை குறைக்க வேண்டும். இலங்கை தமிழர்களுக்கு மறுவாழ்வு கிடைத்திட இலங்கை அரசை மத்திய அரசு நிர்ப்பந்தம் செய்ய வேண்டும். மத்திய, மாநில அரசுகளின் மெத்தனத்தால் தமிழகத்தில் பிரிவினை வாத இயக்கங்கள் உருவாகும் முயற்சிகள் உள்ளன.

இந்த இயக்கங்களை துவக்கத்திலேயே கிள்ளி ஏறிய வேண்டும். ராஜிவ் கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் சிறையிலுள்ள நளினியை பிரியங்கா சந்தித்தது குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.தமிழகத்தில், கோயில்களுக்கு சொந்தமாக ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 739 ஏக்கர் நஞ்சை நிலங்கள், இரு லட்சத்து 18 ஆயிரத்து 375 புஞ்சை நிலங்கள், மானாவாரி நிலங்கள் 20 ஆயிரத்து 746 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இதில் ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 725 குத்தகைதாரர்கள் உள்ளனர். அவர்கள் முறையாக குத்தகை செலுத்தவில்லை.

கோயில் சொத்துக்கள் அபகரிக்கப்படும் நிலையுள்ளது. நிலங்களை ஆராய குழு அமைப்பது தேவையற்றது.மீன் பிடிக்க தடை விதிக்கப்படும் காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை 4, 500 ரூபாயாக உயர்த்த வேண்டும். பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ஐந்து ரூபாய், வறட்சி கால விலையாக லிட்டருக்கு இரண்டு ரூபாய் ஊக்கத்தொகை, தவிடு புண்ணாக்கு கலப்பு தீவனங்களுக்கு ஐம்பது சதவீதம் மானியம் வழங்க வேண்டும்.செவிலியர் படிப்புக்கு பாட புத்தகங்களை அரசு வழங்க வேண்டும். மத்திய அரசு கல்வி கட்டண சலுகையை மதத்தின் அடிப்படையில் வழங்காமல், தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் வழங்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டும்.

மத்திய அரசு ஓய்வூதியர்களுக்கு குறைந்தபட்சம் ஆறாயிரம் ரூபாய் வழங்க வேண்டும். கோவை அம்மன் குளத்தில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் கட்டும் போது விரிசல் ஏற்பட்டு சேதமடைந்துள்ளன. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுமானங்களை மேற்பார்வையிட கட்டட நிபுணர்கள், பொதுமக்கள் அடங்கிய தன்னாட்சி பெற்ற தரக்கட்டுப்பாடு ஆணையத்தை அமைக்க அரசு முன்வர வேண்டும். சமச்சீர் பாடத்திட்டத்தில் தேசிய

மற்றும் ஆன்மிகத்தை சேர்க்க வேண்டும். தமிழக அரசு மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்களை கண்காணிக்க வேண்டும்,போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நெல்லை மாவட்டத்தில் கார் சாகுபடி பணிகளுக்குஜூன் 10ம் தேதி பாபநாசம் அணை திறப்பு:கால்வாய்களை பராமரிக்க**

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் கார் சாகுபடிக்காக வரும் ஜூன் மாதம் 10ம் தேதி பாபநாசம் அணை திறக்கப்படும் என்று கலெக்டர் ஜெயராமன் தெரிவித்தார்.நெல்லை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் ஜெயராமன் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ ரமணசரஸ்வதி முன்னிலை வகித்தார்.இதில் கலெக்டர் பேசியதாவது:கார் சாகுபடிக்கு தேவையான விதைகள் தேவையான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அம்பை, பாளை பகுதிகளை சேர்ந்தவர்கள் விதைகளை பெற்று கொள்ளலாம். வரும் ஜூன் மாதம் 10ம் தேதி கார் சாகுபடிக்காக பாபநாசம் அணை திறக்கப்படுகிறது.

விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி கொள்ள வேண்டும்.கால்வாய்களை பராமரிக்க விவசாயிகள் ஒரு பங்கு நிதி அளித்தால் அரசு 2 பங்கு நிதி அளித்து கால்வாய்களை பராமரிக்கும். மாவட்டத்தில் நடக்கும் மராமத்து பணிகளை பொதுமக்களுக்கு அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.தொடர்ந்து அதிகாரிகள் விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில் அளித்து கூறியதாவது:இந்த ஆண்டு இம்மாதம் வரை 125.70 மி.மீ மழை பெய்துள்ளது.

இது கடந்த ஆண்டை விட 43 சதவீதம் குறைவானதாகும். அடவிநயினார், கொடுமுடியாறு அணைகள் வறண்டு விட்டன.மாவட்டத்தில் 2 ஆயிரத்து 414 குளங்கள் வறண்டு காணப்படுகின்றன. இதில் 35 குளங்களில் மட்டும் ஒரு மாதத்திற்கு தேவையான தண்ணீர் உள்ளது. விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி கொள்ள வேண்டும்.இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகள், பிரச்னைகள் குறித்து விவசாயிகள் பேசினர். கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.முன்னதாக, ராஜிவ்காந்தி நினைவு தினத்தை முன்னிட்டு தீவிரவாத கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி கலெக்டர் ஜெயராமன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. இதில் அதிகாரிகள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மிளகாய் வடிவ செங்கவர்க்க மாம்பழம் தொலையா வட்டத்தில் அதிசயம்**

புதுக்கடை : தொலையாவட்டத்தில் மிளகாய் வடிவத்தில் அதிசய செங்கவரிக்கம் மாம்பழம் காய்த்துள்ளது.குமரி மாவட்டத்தில் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள் அதிகமாக உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் இந்த மூன்று கனிமரங்களும் நிற்கும் முக்கனிகளில் முதல் கனியான மா கனிக்கும். குமரியில் மவுசு அதிகமாகும். மா கனியில் செங்கவரிக்கை மா சுவை மிகுந்ததாகும். ஆதலால் தான் குமரியில் உள்ள ஒவ்வொரு மக்களும் செங்கவரிக்கை மா கனியை அதிகமாக நட்டுள்ளனர். இதில் தொலையாவட்டத்தை சேர்ந்த பேராசிரியர் ஜாண்பெனடிக்ட் என்பவர் வீட்டிலும் செங்கவரிக்க மா நட்டுள்ளார். இந்த செங்கவரிக்கை மா மிளகாய் வடிவத்தில் காய்த்துள்ளது. இந்த மாங்காய் பழுத்துள்ளது. இது பார்ப்பதற்கு ஆச்சரியமூட்டும் வகையில் உள்ளது. இந்த அழகிய மிளகாய் வடிவ மாங்காயை ஆச்சரியத்துடன் பொதுமக்கள் பார்த்துள்ளனர்.

**மஞ்சள் பயிரிட விவசாயிகள் ஆயத்தம்**

திருப்பூர்: மஞ்சள் பயிரிடுவதற்கான பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தேவையான உரம் மற்றும் பூச்சிக்கொல்லி கலந்து உழவு செய்ய அறிவுறுத்தப் பட்டுள்ளது. திருப்பூரின் தெற்கு மற்றும் தென் கிழக்கு பகுதிகளான, அமராவதிபாளையம், கோவில் வழி, காளிபாளையம், கொடு வாய், பெருந்தொழுவு ஆகிய இடங்களில் வாய்க்கால் பாசனம் பெறும் பகுதிகளில் மஞ்சள் சாகுபடிக்கான நிலம் தயார் செய்யப்பட்டு வருகிறது. மஞ்சளுக்கு வைகாசி பட்டம் சிறந்தது; கடந்த ஆண்டு குவிண்டால் ரூ.16 ஆயிரம் வரை விற்றது. இதனால், நடப்பாண்டும் மஞ்சள் பயிரிட வசாயிகள் ஆர்வமுடன் உள்ளனர். கடந்தாண்டை விட, திருப்பூர் பகுதிகளில் மஞ்சள் பயிரிடும் பரப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலத்தை ஐந்து முறை வரை உழவு செய்து, மண்ணை பக்குவம் செய்து வருகின்றனர். விதை மஞ்சளையும் தயார் செய்து வருகின்றனர்; மார்க்கெட்டில் கிலோ 50 ரூபாய் வரை விற்கிறது.  மஞ்சள் பயிரிடுவதற்காக நிலத்தை பக்குவம் செய்வது பற்றி, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சந்தான கிருஷ்ணன் கூறுகையில், ""நிலத்தை நான்கு அல்லது ஐந்து முறை உழவு செய்து பக்குவப்படுத்த வேண்டும். கடைசி முறை உழுவதற்கு முன், ஏக்கருக்கு ஐந்து டன் வரை தொழு உரம் சேர்த்து உழவு செய்ய வேண்டும். ""நன்றாக மக்கிய உரத்துடன், ஏக்கருக்கு உயிரியல் பூசணக்கொல்லி ஐந்து கிலோவையும் சேர்த்து உழுவது சிறந்தது. மஞ்சள் பயிரிடு வதற்கு முன், பூசணக் கொல்லியை பயன்படுத்துவதால், பயிரின் வளர்ச்சியில் கிழங்கு அழுகல் உள்ளிட்ட நோய் தாக்குதலை கட்டுப் படுத்த முடியும்," என்றார்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவங்களில் உள்நாட்டில் நெல் உற்பத்தி 10 கோடி டன்னாக உயரும்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*நடப்பு 2010–11–ஆம் ஆண்டு வேளாண் பருவங்களில் (கரீஃப் மற்றும் ரபி) இந்தியாவின் நெல் உற்பத்தி 9.90 கோடி டன்னாக இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. அதாவது, சென்ற ஆண்டைக் காட்டிலும் நெல் உற்பத்தி 13 சதவீதம் அதிகரிக்கும் என முன்னறிவிப்பு செய்துள்ளது. பருவமழை சிறப்பாக இருக்கும் என்ற மதிப்பீடு, நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு போன்றவற்றால் நெல் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிகிறது.*

*பெரும் சரிவு*

*சென்ற ஆண்டு வேளாண் பருவங்களில் நாட்டின் நெல் உற்பத்தி 8.75 கோடி டன்னாக*

இருந்தது. இது, அதற்கு முந்தைய ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பெரும் சரிவாகும். அவ்வாண்டில் பருவமழை தவறியதே இதற்கு முக்கிய காரணமாகும். நடப்பு ஆண்டில் நெல் பயிரிடும் பரப்பளவு 10 சதவீதம் உயர்ந்து 4.50 கோடி ஹெக்டேராக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு ஹெக்டேர் வாயிலான நெல் உற்பத்தியும் 3 சதவீதம் அதிகரித்து 3.3 டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நம் நாட்டில் பிரதானமாக இரண்டு பருவங்களில் விவசாயிகள் பயிர்கள் சாகுபடியினை மேற்கொள்கின்றனர். வட மாநிலங்களில் இப்பருவங்கள் முறையே கரீஃப் மற்றும் ரபி என்று அழைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் இவை முறையே குறுவை மற்றும் சம்பா என்றழைக்கப்படுகின்றன. இந்தியாவின் மொத்த நெல் உற்பத்தியில் கரீஃப் பருவத்தின் பங்களிப்பு மட்டும் 85 சதவீதமாக உள்ளது. ரபி பருவத்தின் பங்களிப்பு 15 சதவீத அளவிற்கே உள்ளது. இப்பருவத்தில் நாடு முழுவதுமாக கோதுமை சாகுபடியே மும்முரமாக நடைபெறுகிறது.

குறுவை – சம்பா

குறுவை சாகுபடி தென்மேற்கு பருவமழையையும், சம்பா சாகுபடி வடகிழக்கு பருவமழையையும் சார்ந்து நடைபெறுகின்றன. குறுவை பருவம் பொதுவாக ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் நிறைவடைகிறது. இப்பருவத்தில், விதைப்பு பணிகள் ஜூன் மாதத்தின் இடைப்பகுதியில் தொடங்கி ஜூலை மாதத்தின் இடைப்பகுதியில் நிறைவடையும். செப்டம்பர் மாதத்தில், அதாவது வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக அறுவடை பணிகள் மேற்கொள்ளப்படும். அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரையிலான காலம் ரபி பருவம் ஆகும். தமிழ்நாட்டில் இதனை சம்பா பருவம் என்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இப்பருவத்தில் விதைப்பு பணிகள், வடகிழக்குப் பருவமழையையொட்டி மேற்கொள்ளப்படும். அறுவடை ஜனவரி மாதம் நடைபெறும்.

அரிசி–கோதுமை

நம் நாட்டில் அரிசி மற்றும் கோதுமையே மிக பிரதான உணவு தானியங்களாகும். வட மாநிலங்களில் கோதுமையும், கிழக்கு மற்றும் தென் மாநிலங்களில் அரிசியும் மக்களின் பிரதான உணவாக உள்ளன. தென் மாநிலங்களில் ஆந்திரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை நெல் உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. கரீஃப் பருவத்தில் பஞ்சாப், அரியானா மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் நெல் உற்பத்தி செய்கின்றன.

நெல் மற்றும் கோதுமை உற்பத்தி மற்றும் கையிருப்பை மேம்படுத்துவதில் அரசு எப்போதுமே தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இவற்றின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இவற்றுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையையும் மத்திய அரசு அதிகமான அளவில் நிர்ணயிக்கிறது. ஒரு குறிப்பிட்ட விளைபொருளுக்கு அதிக விலை கிடைக்கும் போது விவசாயிகள் அதனை சாகுபடி செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டுவர்.

கொள்முதல் விலை

கரீஃப் பருவம் தொடங்குவதற்கு முன்பாக மத்திய அரசு இப்பருவத்தில் பயிர் செய்யப்படும் முக்கிய பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அறிவிக்கும். இதனை கொள்முதல் விலை என்றும் கூறுவர். அப்போதுதான் எந்த பயிர் அதிக லாபம் தரக் கூடியது என்பதை விவசாயிகள் முடிவு செய்து, அதன்படி ஜூன் மற்றும்

ஜூலை மாதங்களில் விதைப்பு பணிகளை தொடங்க இயலும்.
குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்த அறிவிப்பை விதைப்பு பணிகள் தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக வெளியிட வேண்டும் என்ற மரபு உள்ளது. வேளாண் விளைபொருள்களுக்கான விலை நிர்ணய ஆணையம், முக்கிய விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்த பரிந்துரைகளை மத்திய விவசாய அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கும். பொதுவாக ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்திற்குள் இந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
சென்ற ஆண்டில், ஒரு குவிண்டால் சாதாரண ரக நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை ரூ.1,000–ஆக மத்திய அரசு நிர்ணயம் செய்தது. இது, உயர்தர நெல்லுக்கு ரூ.1,030–ஆக இருந்தது. நடப்பு ஆண்டில், நெல்லுக்கு மேலும் கூடுதலாக விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.